# DEPOSITION OF WITNESS

## (Order XVIII Code of Civil Procedure)

**அசல் வழக்கு எண்.** 261/2011

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். திருப்பெரும்புதூர் 2022 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 15ம் நாள் வா.த.சா.1 லட்சுமி நாராயணன் அவர்களுக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லட்சுமி நாராயணன் (**Pw**2) | வயது | : | |
| த/பெ. | : | | இனம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | குன்றத்தூர் ஜோனல் டெபுடி தாசில்தார் |
| சமயம் | : | | தாலூக்கா | : | |

**வா.த.சா. (Pw2)முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். வாதி தரப்பு சாட்சி 2 ஆவேன். என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது. அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் சத்திய பிரமாண வாக்குமூலத்தினை ஏற்று பிராது படி தீர்ப்பாக வேண்டிக் கொள்கிறேன்.

சர்வே எண்.153/1-ன் 'அ' பதிவேடு ஆவணத்தின் படி 2.34 ஹெக்டேர் நிலம் அரசு மேய்க்கால் புறம்போக்கு என வரையறுக்கப்பட்டுள்ளது. மேய்க்கால் நிலம் புறம்போக்கு என்பது ஆடு, மாடு மேய்ச்சலுக்காக ஒதுக்கப்பட்ட நிலமாகும். என்னிடம் காட்டப்படும் பசலி 1371 சம்மந்தப்பட்ட அடங்கல் எங்கள் அலுவலகத்தில் தேடிபார்த்தோம் ஆனால் கிடைக்கவில்லை. பசலி 1371க்கான அடங்கல் பதிவு செய்யப்பட்டு இருக்கலாம் ஆனால் தற்பொழுது எங்கள் அலுவலகத்தில் இல்லை. பொதுவாக ஒவ்வொரு வருடமும் கிராம நிர்வாக அலுவலர்கள் பசலி ஆண்டு முடிந்ததும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை எங்கள் அலுவலகத்தில் தாக்கல் செய்துவிடுவார்கள். இது போன்ற நடமுறை 1ம் பசலி ஆண்டில் இருந்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மேற்படி பசலி 1371, சர்வே எண். 153/1 ல் அடங்கிய நிலம் அரசு புறம்போக்கு என்பதால் அதற்கு சிட்டா கிடையாது. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1(Ex A1) பசலி 1371 அடங்கல் என்றால் என்னுடைய அலுவலகத்தில் உள்ள கோப்புகளை வைத்து தான் கூறமுடியும். மேற்படி இந்த ஆவணம் எங்கள் அலுவலகத்தில் கிடைக்காததால் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை வைத்து பதில் கூறமுடியாது. சர்வே எண்.153/1 அடங்கிய F.M.B. படி சர்வே எண்.153/1 ல் உள்ள நிலம் காலி நிலமாகத்தான் உள்ளது. பொதுவாக அரசு புறம்போக்கு இடத்திற்கு தனிநபர் பெயருக்கு அடங்கல் வாங்க என்ன நடைமுறை என்றால் யாரேனும் அரசு போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து இருந்தால் அவருக்கு தண்ட தீர்வு விதித்து அது குறித்து அடங்கலில் பதிவு செய்வோம். சர்வே எண். 153/1 நிலத்தில் ஆக்கிரமிப்பு உள்ளது அது குறித்தும் தண்டதீர்வு குறித்து அடங்கலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தண்டதீர்வு விதித்தது குறித்து தனிப்பதிவேடு ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது. சர்வே எண்.153/1 சம்மந்தப்பட்ட தண்டதீர்வை வசூலித்த விபரம் எந்த ஆண்டில் இருந்து பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அலுவலத்தில் உள்ள பதிவேட்டை பார்த்தான் கூறமுடியும் தற்பொழுது கோப்பு என்னிடம் இல்லாததால் தற்பொழுது கூறஇயலாது. பசலி 1421 க்கான அடங்கலில் 5 வது நபரான முருகேசன் என்ற நபருக்கு எவ்வளவு நிலம் அடங்கலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 4 ஏர்ஸ் வேலி அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என அடங்கலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பசலி 1421 அடங்கலில் 1 முதல் 3 நபர்கள் நபர் குடிசை அமைத்து 1 ஏர்ஸ் ஆக்கிரமிப்பும், 1/2 ஏர்ஸ் ஆக்கிரமிப்பும் செய்துள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 5 நபர்களுக்கு எப்பொழுது தண்டதீர்வை வசூலித்து அடங்கல் பதிவு செய்யப்பட்டது என்றால் அடங்கலில் அது குறித்து பதிவு செய்யப்படவில்லை. பொதுவாக அடங்கலில் ஆக்கிரமிப்பாளர்கள் குறித்து அடங்கல் பதிவு செய்யும் பொழுது அது சம்மந்தப்பட்ட B Memo நிலத்தையும் பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். அலுவலத்தில் இது சம்மந்தப்பட்ட கோப்புகளை வைத்து தான் கூறமுடியும்.

| வ. எண் | **Exhibits** | **தேதி** | **ஆவணங்கள் விபரம்** | : | **அசல் / நகல்** |
|---|---|---|---|---|---|
| 1. | Ex.X1 | | சர்வே எண்.153/1-ன் 'அ' பதிவேடு | : | சான்றிட்ட நகல் (அசலுடன் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அரசு மேய்க்கால் புறம்போக்கு என வரையறுக்கப்பட்டன. | | ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) |
| 2. | Ex.X2 | | சர்வே எண்.153/1 அடங்கிய F.M.B. | : | சான்றிட்ட நகல் |
| 3. | Ex.X3 | | சர்வே எண்.153/1, பசலி 1421 அடங்கல் | | சான்றிட்ட நகல் |

<u>**குறுக்கு விசாரணை**</u>

மண்டல துணை வட்டாட்சியர் என்ற பதவி எந்த ஆண்டில் இருந்து உள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. ஆனால் 1983 க்கு பிறகு தான் மண்டல துணை வட்டாட்சியர் பதவியை ஏற்படுத்தியிருப்பார். சா.சா.1 (Ex.X1) அ பதிவேடு 31.08.1987 ல் இருந்து உள்ள பதிவேடு ஆகும். சா.சா.2 (Ex.X2) F.M.B 1987 ல் ஏற்படுத்தப்பட்ட வரைப்படம் என்றால் சரிதான். பொதுவாக அரசு புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்யும் பொழுது F.M.B ல் காண்பிப்பதில் வழக்கமா என்றால் இல்லை. சர்வே எண்.153/1 நிலத்தின் தற்பொழுதைய நிலை என்ன என கிராம நிர்வாக அலுவலரை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன் மேற்படி நிலத்தில் தற்பொழுது சுமார் 20 வீடுகள் மற்றும் குளம் இருக்கிறது என தெரிந்து கொண்டேன். புறம்போக்கு இடத்தில் ஒரு தனிநபர் ஆக்கிரமிப்பு செய்தால் மட்டுமே அடங்கலில் ஆக்கிரமிப்பு குறித்து பதிவு செய்யப்படலாம் என்றால் சரிதான். சா.சா.3 (Ex.X3) சர்வே எண்.153/1 நிலத்தில் 5 நபர்கள் குறிப்பிடப்பட்டனர். அவர்கள் ஆக்கிரமிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் (Ex.A4) வா.த.சா.ஆ.4 ல் சர்வே எண்.153/1 நிலம் கிராம நத்தம் என்ற வகைப்பாட்டில் வரும் என குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் என்னிடம் உள்ள கோப்புகளின் அடிப்படையில் சர்வே எண்.153/1 நிலம் அரசு மேய்க்கால் புறம்போக்கு நிலமாகும். அனுபவ சான்று எதன் அடிப்படையில் வழங்கப்படும் என்றால் கோப்புகளை சரிபார்த்து அதன் அடிப்படையில் வழங்கப்படும். அரசு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்பவர்களுக்கு அனுபவ சான்று வழங்கமாட்டோம். தலைமை எழுத்து துணை வட்டாட்சியர் எந்த வருடம் உருவாக்கப்பட்ட பதவி என்றால் 1980 க்கு முன்பில் இருந்தே உள்ளது ஆனால் குறிப்பிட்டு எந்த வருடம் என்று எனக்கு தெரியாது. தலைமை எழுத்து துணை வட்டாட்சியர் என்ற பதவியே இல்லை என்றால் சரியல்ல. அப்படி ஒரு பதவி இருந்தது.

**<u>மறு விசாரணை</u>**

தமிழக அரசு சுற்றறிக்கையின் படி 2001ல் இருந்து B Memo பதிவு செய்யக்கூடாது என்றால் 2015ம் வருடம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சுற்றறிக்கை வந்தது அதிலிருந்து புதியதாக B Memo பதிவு செய்யப்படவில்லை ஆனால் அதற்கு முன்பு பதிவு செய்யப்பட்டவை தொடர்ந்து பதிவு செய்யப்பட்டு வருகிறது.